## இயல் – 2 – ஈடில்லா இயற்கை
## பகுதி – அ

**I ) ஒரு மதிப்பெண்வினா**

**1.வள்ளைப்பாட்டு எப்போது பாடப்படுகிறது?**

அ) நெல் குத்தும்போது
ஆ) ஏற்றம் இறைக்கும்போது
இ) நாற்று நடும்போது
ஈ) போரடிக்கும்போது

**விடை : அ ) நெல்குத்தும்போது**

**2 புன்செய் என்பது எத்தகைய நிலப்பகுதி?**

அ) வறண்ட களிமண் நிலம்
ஆ.உவர்நிலம்
இ) நிறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
ஈ) குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்

**விடை : ஈ ) குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்**

**3. காங்கேய நாடு எந்த மண்டலத்தில் அமைந்துள்ளது?**

அ) நடுமண்டலம்
ஆ) சோழ மண்டலம்
இதொண்டை மண்டலம்
ஈ) கொங்கு மண்டலம்

**விடை : ஈ ) கொங்கு மண்டலம்**

**4. கீழ்க்காணும் தொடர்களில் 'வின்னம்' என்னும் பொருள்தரும் சொல் அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.**

அ) பழங்கள் கீழே கொட்டியதால் சேதமடைந்தன.
ஆ) பலத்த காற்றால் மரங்கள் ஒடிந்து விழுந்தன.
இ) மழையின் காரணமாகச் சாலைவெறிச்சோடிக் காணப்பட்டது.
ஈ) புயல்காற்றால் வீடுகளின் கூரைகள் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன.

**விடை : அ ) பழங்கள் கொட்டியதால் சேதமடைந்தன.**

**5. செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்பவை எவை?**

அ) நறுமணம் மிகுந்த மலர்கள்
ஆ) பசும்புல்வெளிகளின் பனித்துளிகள்
இ) மட்டக் குதிரைகளின்உடல்சூட்டின் கதகதப்பு
ஈ ) பாலூறும் மரத்தில் இருந்து ஒழுகும் திரவம்

**விடை : ஈ ) பாலூறும் மரத்தில் இருந்து ஒழுகும் திரவம்**

**6. சியாட்டல் எந்தப் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்**

அ) அபார்ஜைன் பழங்குடியினர்

ஆ) அசாந்தி பழங்குடியினர்
இ) சுகுவாமிஷ் பழங்குடியினர்
ஈ) முபட்டி பழங்குடியினர்
**விடை : இ ) சுகுவாமிஷ் பழங்குடியினர்**

**7. சியாட்டல் தன்னுடைய உடன்பிறப்புகளாக எவற்றைக் கருதுகிறார்?**
அ) மரங்கள்
ஆ)ஆறுகள்
இ) மலைகள்
ஈ) விலங்குகள்
**விடை : ஆ ) ஆறுகள்**

**8. கீழ்க்காணும் தொடர்களில் வினைமுற்றுச் சொல்லைக் கொண்ட தொடரைத்தேர்ந்தெடுக்க.**
அ) எழுதிய பையன்
ஆ)கண்ணன் ஓடினான்
இ) சென்றவளவன்
ஈ) மகிழ்ந்த மாலா
**விடை : ஆ ) கண்ணன் ஓடினான்**

**9. தேர்வுக்குச் சிறந்த முறையில் உன்னைத் தயார்படுத்திக்கொள்" இது எவ்வகைத் தொடர்?**
அ) தெரிநிலை வினைமுற்றுத் தொடர்
ஆ) ஏவல்வினைமுற்றுத் தொடர்
இ)வியங்கோள் வினைமுற்றுத் தொடர்
ஈ) குறிப்பு வினைமுற்றுத் தொடர்
**விடை : ஆ ) ஏவல் வினைமுற்றுத்தொடர்.**

**10. மாடு வயலில் மேய்ந்தது**
**-இத்தொடரிலுள்ள வினைமுற்று எது?**
அ) மாடு ஆ) வயல்
இ) புல் ஈ)மேய்ந்தது
**விடை : ஈ ) மேய்ந்தது**

**பகுதி-ஆ**
**11. சிறுவினா**

**1.நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படும்படி ஆறுசெய்த செயல் யாது?**

நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப் படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

**2.எந்தெந்தப் பகுதிகளில் வீசிய புயலால் சாலையில் சென்ற மக்கள் தடுமாறினர்?**

ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்.

**3.எத்தகைய உணர்வுகளைக் காற்று சுமந்து நிற்பதாகச் சியாட்டல் கூறுகிறார்?**

இந்தக் காற்றானது அனைத்து உயிர்களையும் காக்கிறது. இவ்வுணர்வுகளைச் சுமந்து நிற்கும்காற்றின் இன்றியமையாமையை, நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் நீங்கள் மறக்கவே கூடாது.

**4.காற்றைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியம் குறித்துச் சியாட்டல் கூறுவது யாது?**

நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது. பொதுவான ஒரு காற்றையே இவை யாவும் சுவாசிக்கின்றன. எனவே காற்றைப் பாதுகாக்க வேண்டும்.

**5.மனிதன் தன் சுயநலத்தால் தொலைத்து விட்டவையாக நீ கருதுவது யாது?**

- மரங்கள்
- ஆறுகள்
- மலைகள்
- குளங்கள்
- சுத்தமான நீர்
- சுத்தமான காற்று

**6. ஒரு செயல் நடைபெறுவதற்கு முதன்மையானவையாகத் தெரிநிலை வினைமுற்று காட்டுபவை எவை?**

* செய்பவர்
* கருவி
* நிலம்
* செயல்

* காலம்
* செய்பொருள்

**7.வியங்கோள் வினைமுற்றுவிகுதிகள் யாவை?**

க , இய , இயர் , அல்

## பகுதி – இ
## III. பெருவினா

**1.ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

**ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன :**
* நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.
* விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது.
* குளர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கின்றது.
* நெஞ்சில் இரக்கம் இல்லாதவர்கள் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

**2.ஐம்பெரும் பூதங்களோடு கொள்ள வேண்டிய உறவுநிலை குறித்துச் சியாட்டல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நிலம்**
* எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும்.
* இந்நிலமே எங்கள் தாயாகும். எமது உறவு முறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும்.
* இதனை எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள் அப்போது தான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள்.

**நீர்**
* ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களே ஆகும்.
*இந்த ஆறுகள் யாவும் எம் உடன் பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.
* இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும். இவ்வாறு நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளார்.

**காற்று**

* எம்மக்கள் யாவரும் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும், நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும்மண்வாசனையையும், தேவதாருமரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.
* நாங்கள் காற்றை மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது.
* நீங்கள் சுவாசிக்கும் காற்று பற்றிச் சிந்தித்ததில்லை. காற்று அனைத்து உயிர்களையும் காக்கிறது.நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் காற்றின் இன்றிமையாமையை நீங்கள்மறத்தல் கூடாது.

**வானம்**

இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை விலை கொடுத்து வாங்க இயலாது எனச் சியாட்டல் கூறுகிறார்.

**பகுதி-ஈ**

**IV.செயல்பாடு:**

காடுகளைப் போற்றும் முழக்கத் தொடர்களைத்(5) தனித்தாளில் எழுதுக.

www.grlvidya.in